மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியைப்பற்றித்தான் இப்போது கேள்வி, அவர் திருப்பூர் தொகுதியைப்பற்றிய கேள்வியைக் கேட்கின்றார். தனிக் கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிவபுண்ணியம், இது அவிநாசி தொகுதிபற்றிய கேள்வி, உங்களுக்கே மனசாட்சி உறுத்துகிறதுபோல் இருக்கிறது, விட்டுவிடுங்கள்.

வினா எண் 142, திரு. என். ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

மேல்நிலைப் பள்ளி

***16256—திரு. என். ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், தில்லையாடி அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் 2002-2003 இல் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தில்லையாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு இதுவரையில் எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் அரசினுடைய நிதி நிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ரங்கநாதன்.

திரு. என். ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகிறேன். தமிழ்த் தாயை வணங்குகிறேன்.

2002 ஏப்ரல் 17]

தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவை வணங்குகிறேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகி தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன் ஆகியோர், பிறந்து வளர்ந்த ஊரான தில்லையாடி முற்றிலும் ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் முழுமையாக வசிக்கின்ற பின்தங்கிய பகுதியாகும். எனவே, தில்லையாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வதுடன், அதற்கான கருத்துரு விரைவிலேயே அனுப்பப்படும் என்பதையும் மிக்கப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தில்லையாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு சில நிபந்தனைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதில் 2 இலட்சம் ரூபாய் பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்த வேண்டும். இதுவரை அவர்கள் செலுத்தவில்லை. 10 ஆம் வகுப்பில் 100 மாணவர்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கின்றது. அங்கு 55 மாணவர்கள் இருக்கின்றார்கள். இடவசதி, கட்டட வசதியைப் பொறுத்தவரையில் 3 ஏக்கர் விளையாட்டுக்கு உட்பட நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கு 5 ஏக்கரும் இருக்க வேண்டும். ஆனால் அவ்விடத்தில் ஓர் ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு விதித்துள்ள சில விதிமுறைகளுக்கு ஏற்ப அந்த வசதிகளைப் பெருக்கி கருத்துரு அனுப்பி வைத்தார்கள் என்றால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. பச்சைமால்.

திரு. தா. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரசு. . . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பச்சைமால், பூம்புகார் தொகுதி.

வினா எண் 143, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.